என்பது எனக்குத் தெரியும். ஆகவே புதிய இடம் வாங்கி அங்கே கட்டிடம் கட்ட ஏற்பாடு செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து குறிப்புகளை கேட்டிருக்கிறேன். அங்கேயிருந்து வந்த குறிப்பில் கட்டிடம் அங்கே வேறு கட்டிடம் கட்டுவதற்காகத்தான் குறிப்பு அனுப்பப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னபடி அங்கே இடமே இல்லை வேறு கட்டிடம் கட்ட முடியாது என்றால் அதைப் பற்றி இந்த அரசு ஆய்வு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 222, திரு. வே. தம்புசாமி, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்.

222—

கங்கனாஞ்சேரி வழியாக கும்பகோணத்திற்குப் பேருந்து இயக்குதல்

20010*—திரு. வே. தம்புசாமி:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினத்திலிருந்து நாகூர், கங்கனாஞ்சேரி வழியாக கும்பகோணத்திற்கு சோழன் போக்குவரத்துக் கழகம் மூலம் இயக்கப்பட்டு நிறுத்தப்பட்ட பேருந்தை மீண்டும் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோரிக்கை தடத்தில் கங்கனாஞ்சேரியிலிருந்து நாகூர் வரையிலான சாலைப்பகுதி செப்பனிடப்பட்டு வருகிறது. அச்சாலை பேருந்து இயக்கத்திற்குத் தகுதி வாய்ந்ததாக செப்பனிடப்பட்ட பிறகு கோரிக்கை தடத்தில் நேரடிப் பேருந்து இயக்குவதற்கான நடவடிக்கை சோழன் போக்குவரத்துக் கழகம் எடுக்கும்.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகூர், கங்கனாஞ்சேரி வழியாக கும்பகோணம் சென்று இருந்த பஸ், அந்த பகுதி சாதாரண மக்களைக் கொண்டிருக்கின்ற பகுதி, நாகூரிலிருந்து கூட கும்பகோணத்திற்கும், அதையொட்டி இருக்கின்ற கிராமங்களில் இருந்தும் கும்பகோணம் கல்லூரிக்கு, கும்பகோணம் நகருக்கு நேர் வழியில் சென்று கொண்டிருந்தார்கள். அந்த பஸ் சாலைப் போக்குவரத்து சரியில்லை என்று ஓராண்டுக் காலமாக நிறுத்தப்பட்டு விட்டது.

இப்போது வந்த ஆயில் கமிஷன் மூலம் அந்த சாலை சீரமைக்கப்பட்டு நல்ல நிலையில் இருக்கிறது. ஆகவே இப்போதாவது அந்த பஸ்-ஐ கல்லூரி மாணவர்கள், பள்ளி மாணவர்கள், மருத்துவமனைக்கு செல்லக்கூடியவர்கள் கும்பகோணம் நேர் வழியிலே செல்வதற்கு அமைச்சர் அவர்கள் பேருந்து விரைவாக விட்டு இயக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் *10-05*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகளை மனதில் கொண்டு அந்தச் சாலை செப்பனிடப்பட்டு இருக்குமானால் ஒரு வார காலத்தில் அந்த பேருந்துகளை இயக்குவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *223*, திரு. கி. பாலசுப்பிரமணியன், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்.

223—

பட்டுக்கோட்டை-சென்னைக்கு பேருந்துகள் இயக்குதல்

***37286—திரு. கி. பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டைக்கு சென்னையிலிருந்து இயக்கப்பட்டு நிறுத்தப்பட்ட *332, 336*ஏ ஆகிய திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை மீண்டும் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள எந்த வழித்தடமும் நிறுத்தப்படவில்லை.

திரு. கி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினா கடந்த ஆண்டு என்னால் கேட்கப்பட்டதாகும். இருந்தாலும் நமது மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்